www.Padasalai.Net தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள் www.CBSEtips.in

Ts-11T

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2022

# வகுப்பு 11

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 45

**I. பலவுள் தெரிக:** **10×1=10**

1) 'கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல்கனிமங்கள்' அடி மோனையைத் தேர்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2) பாயிரம் இல்லது ................ அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

3) பொருத்தமான இலக்கிய வடிவம்
அ) ஏதிலிக்குருவிகள் - மரபுக்கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை
இ) யானை டாக்டர் - குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

4) மண்ணுக்கு வளம் சேர்ப்பன
அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

5) வான்பொய்த்தது - உணர்த்தும் பொருள்
அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

6) 'ஏதிலாய் குருவிகள் எங்கோ போயின' - என்ற வரியின் ஆசிரியர்
அ) பிரமிள் ஆ) பெரியவர் கவிராயர்
இ) அழகிய பெரியவன் ஈ) சிவராமலிங்கம்

7) சிற்றிலக்கியங்களின் வகைகள்
அ) 86 ஆ) 96 இ) 98 ஈ) 88

8) 'பேச்சுமொழியும் கவிதைமொழியும்' என்ற உரைநடையின் ஆசிரியர்
அ) இந்திரன் ஆ) முத்துலிங்கம் இ) வில்வரத்தினம் ஈ) பவணந்தியார்

9) தவறான இணையைத் தேர்க.
அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
ஆ) கடல் + அலை - உயிர் + மெய்
இ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
ஈ) மண் + வளம் - மெய் + மெய்

10) 'புலன்+அறிவு - புலனறிவு' எந்த விதிப்படி புணர்ந்துள்ளது?
அ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
ஆ) ஈறுபோதல்
இ) இனமிகல்
ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

**II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக:** **4×2=8**

11) இனம் மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

12) பாயிரம் பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

13) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



14) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

15) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

16) கோட்டை என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

**III. எவையேனும் நான்கனுக்கு விடை தருக:** **4×4=16**

17) நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகின்றது?

18) 'என்னுயிர் தமிழ் என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

19) 'சலச வாவியில் செங்கயில் பாயும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

20) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

21) **புணர்ச்சியிலக்கணம் தருக:**

அ) பூங்கொடி

ஆ) குரங்குக்குட்டி

22) புறநானூற்று பாடலின் கருத்துக்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

**IV. ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக:** **1×5=5**

23) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை தென்கரை நாட்டு வளங்களை விவரிக்க.

24) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

25) 'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**V. மனப்பாடப் பாடல்:** **1×6=6**

26) 'ஏடு தொடக்கி' எனத் தொடங்கும் பாடலையும், 'வடு' என முடியும் திருக்குறளையும் எழுதுக.

[illegible]. மு. ஹரிராம் மெட்ரிக் மே.நி.ப. வல்லம் 627809

9443340047.

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com